டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து உதவி செய்து வருகிறது. அது மட்டுமல்லாமல் 16×40 கிரில் ஷெட் அமைத்து அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு இடம் அளித்து வருகிறது. அதுமட்டுமல்லாமல், கனரா வங்கி மூலமாக இரண்டு மூட்டை அரிசியும், அரிசி ஆலை அதிபர்கள் மூலமாக 2 மூட்டை அரிசியும் அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியும், அங்கே நிரந்தரமாக 5 கான்ஸ்டபிள்களை அமர்த்தியும் அவர்களுக்கு தக்க பாதுகாப்பை அரசு கொடுத்து வருகிறது. அது மட்டுமல்லாமல் 17 பயர் சர்வீஸ் அலுவலர்களை அங்கே நிரந்தரமாக வைத்து பயர் சர்வீஸ் வண்டியின் மூலம் அந்த கூரைகள் மீது காலையும் மாலையும் தண்ணீர் ஊற்றி வருகிறது. அப்படியிருந்தும் கூட இன்றும் ஒவ்வொரு நாளும் 2, 3 குடிசைகள் எரிந்து கொண்டே வருகிறது. அதனால் அந்தப் பகுதி மக்கள் வேலைக்கு செல்லாமல் வீடுகளில் உள்ள பொருள்களை வெளியே எடுத்து வைத்து விட்டு, எந்த நேரம் நம்முடைய வீடு தீ பிடித்து எரியுமோ என்று அச்சப்படுகிற நிலையில் இருந்து வருகிறார்கள். அவர்களுடைய குறையைப் போக்குவதற்கு சயன்டிபிக் டெஸ்ட் மூலமாக, பாஸ்பரஸ் போன்ற பொருள்களால் அந்த வீடுகள் எரிகின்றனவா அல்லது யாராவது வேண்டுமென்றே இந்தச் செயல்களைச் செய்கிறார்களா என்று கண்டுபிடித்து, அந்த மக்களுடைய பீதியைப் போக்க இந்த அரசு தீவிரமாக நடவடிக்கையெடுக்குமா? அதற்கு என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீவிரமாக எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினரே தெரிவித்து இருக்கிறார்கள். அங்கே எந்தவிதமான அச்சமும் தேவையில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே பாதுகாப்பாக இருப்பதற்காக காவல் துறை நிறுத்தப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து இப்போது குடிசைகள் எதுவும் எரியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) மன்னார்குடி, நீடாமங்கலம், பட்டுக்கோட்டை வட்டங்களில் ஏற்படும் மின் அழுத்தக்குறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கு. சீனிவாசன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கு. சீனிவாசன்.

1992 ஏப்பரல் 20]

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மன்னார்குடி, நீடாமங்கலம் மற்றும் பட்டுக்கோட்டை வட்டங்களில் மின் அழுத்தம் குறைவாக உள்ளது குறித்து'' மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவர அறிக்கை

பொதுவாக பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் விவசாய பணிகள் உச்சக்கட்டத்தில் செயல்படுவதால் அனைத்து விவசாய பம்புசெட்டுகளும் இயக்கத்தில் கொண்டு வரப்படுகின்றன. இவ்வாறு விவசாய பம்புசெட்டுகளின் முழு மின்சுமையும் மின் கட்டமைப்பினால் (Grid) ஏற்க வேண்டியுள்ளதால் சற்று மின் அழுத்த தொய்வு ஏற்படுகிறது.

தமிழ்நாட்டில் ஒருங்கிணைக்கப்பட்ட உயர் மின் அழுத்த கட்டமைப்பு (Grid) மூலம் அனைத்து மின் உற்பத்தி நிலையங்களும், துணைமின் நிலையங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு செயல்படும்பொழுது கடந்த சில நாட்களாக நெய்வேலி அனல் உற்பத்தி நிலையங்களில் சில மின் உற்பத்திப் பிரிவுகள் மேம்பாட்டுப் பணிகளுக்காகவும் மற்றும் சில தொழில் நுட்ப காரணங்களுக்காகவும் இயக்கத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக, நெய்வேலி மின் நிலையங்களிலிருந்து தமிழ்நாட்டுக்கு வழங்கப்படும் மின்சக்தி குறைந்துள்ளது.

மேற்கண்ட காரணங்களால் தற்பொழுது நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் மற்றும் தஞ்சை மாட்டங்களில் சில பகுதிகளில் மின் அழுத்தம் சீராக இல்லை.

பட்டுக்கோட்டை மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் புதிய மின் பளுவினை ஏற்கும் வகையிலும் மின் அழுத்தம் சீராக அமைவதற்காகவும் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப் பட உள்ளன.

அ. பட்டுக்கோட்டை 66/11 கே. வி. துணை மின்நிலையத்தை 110/66-11 கே. வி. இயக்கத்திற்கு மேம்படுத்துவது.

ஆ. கீழ்க்கண்ட இடங்களில் புதிய துணை மின் நிலையம் அமைப்பது.

1. கரம்பக்குடி 66/22 கே. வி.
2. திருமாக்கோட்டை 66/11 கே. வி.
3. அரசுப்பட்டு 33/11 கே. வி.
4. குருங்குளம் 66/11 கே. வி.

[திரு. எஸ். கண்ணப்பன்] [1992 ஏப்ரல் 20

மேற்கண்ட மேம்பாட்டு பணி மற்றும் புதிய மின்நிலையங்கள் அமைப்புப் பணிகள் மூலம் இப்பகுதிகளில் மின் அழுத்தம் இயல்பாக இருக்கும்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் மன்னார்குடி, நீடாமங்கலம் மற்றும் தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை பகுதிகளில் மின் அழுத்தம் குறைவு காரண மாக பம்ப் செட்டுகளில் உள்ள மோட்டார்களின் காயில்கள் புகைந்தும், அந்தப் பகுதிகளில் உள்ள தெரு விளக்குகள் இரவில் ஜீரோ வாட் விளக்கு எரிவதற்கு ஒப்பாக சரியாக எரி யாமலும் இன்றைக்கு அந்தப் பகுதிகளில் உள்ள விவசாய மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இதுகுறித்து விவர அறிக்கையில் தெரிவிக்கையில் நெய்வேலியில் மேம்பாட்டுப் பணி கள் நடைபெறுகிற காரணத்தால் மின் அழுத்தம் குறைவாக உள்ளதாக இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மூன்று பகுதிகளை விடுத்து மற்ற பகுதிகளில் எல்லாம் நிறைவாக மின்சாரம் வருகிற வேளையில், இந்த மூன்று வட்டங்களில் மட்டும் மின்சார அழுத்தம் குறைவாக இருக்கிற காரணத்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் சாகுபடி செய்து பயிர்கள் பட்டுப் போகிற நிலைமை ஏற்பட்டிருக்கிற காரணத்தால், அதற்கு தற்காலிகமாக ஒரு மாற்று வழியை காணவேண்டும். மற்ற பகுதிகளில் எல்லாம் கிட்டத்தட்ட 20 மணி நேரம் மின்சாரம் வருகிறபோது, இந்த மூன்று வட்டங்களில் ஒரு மணி நேரம் கூட மின்சாரம் வராத நிலைமை இருக்கிற காரணத்தால், அனைத்து பகுதிகளுக்கும் சமச்சீராக, 12 மணி நேரமாவது— இதற்கு நிரந்தர தீர்வு காண்கிற வகையில், மின்சார சப்ளை செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மின்சார வினியோகத்தைப் பொறுத்தமட்டிலே, பிப்ரவரி, மார்ச் மாதங்களிலே அதிகமாக விவசாயம் நடைபெறுகின்ற காரணத்தாலே, பம்புசெட்டுகள் அனைத்தும் ஒன்றாக இயங்குகின்ற நேரத்திலே, கொஞ்சம் அழுத்தம் குறைவாக இருப்பது என்பது உண்மைதான். குறிப் பாக, இப்போது குறிப்பிடப்பட்டுள்ள பட்டுக்கோட்டை, நீடாமங்கலம், மன்னார்குடி பகுதிகளிலே, இதுமாதிரிப் பிரச் சினைகள் இருக்கின்றன என்பது அரசினுடைய கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டுவரப்பட்டு இருக்கிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் —இந்த அறிக்கையில் சொல்லப்பட்டு இருப்பதைப் போல—நெய்வேலியிலே மேம்பாட்டுப் பணிகளை மேற் கொள்ளுகின்ற நேரத்திலே, அதற்காக இன்றைக்குப் பணிகளைச் செய்கின்ற நேரத்திலே, மின் வினியோகம் கொஞ்சம்

1992 ஏப்ரல் 20[[திரு. எஸ். கண்ணப்பன்]

குறைவாகக் கொடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தால், சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இது சம்பந்த மாக, நேற்றைய முன்தினம் நம்முடைய தலைமைப் பொறி யாளர் (திருச்சி) அவர்களோடு தொடர்பு கொண்டு, — மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியைப் பார்த்த மட்டிலே—உடனடியாக இதற்கு என்ன நடவடிக்கையை எடுத் திருக்கிறீர்கள் என்று வினவிய நேரத்திலே, அந்தப் பகுதியி லுள்ள விவசாயிகளைச் சந்தித்து, மாற்று ஏற்பாடாக, அவர்கள் சொல்லியபடி, முறை வைத்து, மின்சார வினியோகத்தைத் தந்தால் முறையாக இருக்கும் என்பதைத் தெரிவித்ததாகச் சொன்னார்கள். ஆகவே, இதுசம்பந்தமாக, உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு, திருச்சியிலே இருக்கின்ற நம் முடைய மின்துறையினுடைய தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஆகவே, மேற் பார்வைப் பொறியாளர்கள் இரண்டு பேரும்-நாகைப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தினுடைய மேற்பார்வைப் பொறி யாளரும், தஞ்சை மாவட்டத்தினுடைய மேற்பார்வைப் பொறியாளரும், இதற்கான நடவடிக்கைகளிலே இறங்கி யிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக மின் அழுத்தம் குறைவில்லாமல் சீர்செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி, நீடாமங்கலம், பட்டுக்கோட்டை விவசாயப் பெருங்குடி மக்களுடைய மின்சாரப் பற்றாக்குறை கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றித் தந்த மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, 1976-77 மற்றும் 1977-78-ஆம் ஆண்டுகளுக்கான, தமிழ்நாடு மின்வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கை களின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் 1987-88 ஆம் ஆண்டு, 54-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது, அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் 40-வது அறிக்கை, மற்றும் இந்தியத் தணிக்கைத்